**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 37/2024**

**நாள்– 28.01.2026**

**வா.சா. 1 – திரு.வெங்கடாசலம்**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கினைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரையப் பத்திரத்தில் சர்வே எண் மாறிவிட்டதால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தினை யார் கிரையம் பெற்றது என்றால் எனது தாத்தா ராமசாமி ஆவார். எனது தாத்தா யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் பொன்னுசாமி, சின்னம்மாள் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி தாவா சொத்தினை கிரையம் கொடுத்தவர்கள் மற்றும் கிரையம் வாங்கியவர்கள் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு நான் மட்டும்தான் வாரிசா என்றால் இல்லை, எனது தாய் பாவாயி (எ) பாப்பாயி மற்றும் எனது சகோதரி சாந்தி ஆவர். தாவா சொத்து எனக்கு மட்டுமே பாத்தியம் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் மேற்படி பாவாயி மற்றும் சாந்தி எனக்கு பாகவிடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டார்கள்.

2) மேற்படி பொன்னுசாமி, சின்னம்மாள் ஆகியோரின் வாரிசுகள் யார் என்றால் 1ம் பிரதிவாதி பொன்னுசாமியின் மனைவி, 2ம் பிரதிவாதி பொன்னுசாமியின் மருமகள், 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மகள் ஆகியோர் ஆவர். எனது தாத்தா கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 1800 சதுர அடியாகும். வா.சா.ஆ.1ல் தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 211/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சரியான சர்வே எண் என்னவென்றால் 212/10C1 ஆகும்.

3) தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்தினை பிரதிவாதிகள் எனக்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் எனது அனுபவத்தினை இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தவறாக கிரையம் பெற்றது என்னுடைய தாத்தாவின் தவறு என்றாலும், தற்போது பிரதிவாதிகள் மீது நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தவறு என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் மீது சர்வே எண் தவறாக உள்ளதை சரி செய்யுமாறு வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த

உரிமை இல்லை என்றாலும் அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**